**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C. 206/2024**

**Prosecution witness : அ.சா.6** **Date : 28.07.2025**

| Name : சிவகுமார் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1 present. ) (Accused 2, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது செட்டிமான்குறிச்சியில் உதவி பொறியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2023ம் வருடத்தில் ஜலகண்டாபுரத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக பொறுப்பு அலுவலில் இருந்த போது ஜலகண்டாபுரம் பகுதியில் ராஜா என்பவர் தாழ்வழுத்த மின்பாதையை குச்சி வைத்து கொஞ்சம் தள்ளி வைத்தார். இது சம்மந்தமாக எங்களிடம் எந்தவிதமான முன் அனுமதியும் பெறவில்லை. அவ்வாறு முன் அனுமதி இல்லாமல் தள்ளி வைத்தது தவறாகும். ஆஜர் எதிரி தான் ராஜா என சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் 15.08.2023ம் தேதி விசாரித்தனர். போலீசார் விசாரிக்கும் போது மாற்றி அமைத்தது குறித்து போலீசாரிடம் கடிதம் கொடுத்தேனா என்றால் 19.08.2023ம் தேதி கொடுத்தேன். 19.08.2023ம் தேதிக்கு பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3) போலீசார் எங்களிடம் அவ்வாறு எதிரி மின்பாதையை மாற்றி அமைத்தது சம்மந்தமாக அறிக்கை ஏதாவது பெற்றார்களா என்றால் இல்லை. நான் சம்பவயிடம் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம். நான் சென்று பார்க்கும் போது எதிரி வீட்டில் தாழ்வழுத்த மின்கம்பி தள்ளி வைத்ததற்கான முகாந்திரம் இல்லை. என்னிடம் யார் வந்து கம்பி தள்ளி வைத்ததாக சொன்னார் என்றால் கலையரசன், த/பெ.வடிவேலு என்பவர் என்னிடம் புகார் அளித்தார்.

4) அவரிடம் பெற்ற புகாரின் அடிப்படையில் நான் சம்பவயிடம் சென்று பார்த்த போது அ.சா.1 புகாரில் கூறியது போல் அவ்விடம் எதுவும் மாற்றியமைக்கப்படவில்லை. போலீசாரிடமும் விசாரணையில் எதிரி மின்மாற்றி கம்பியை மாற்றி அமைக்கவில்லை என்று தான் கூறினேன்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.